பக்கங்கள்:-18

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 08 | செவ்வாய்க்கிழமை | 24.09.2024 | அதிர்வு 053

## வடக்கு மாகாண ஆளுநர் சார்ள்ஸூம் இராஜிநாமா!

(எஸ்.நிதர்ஷன்)



வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தனது பதவியை இராஜிநாமா செய்வதாக அறி

06



# வன்முறைகளுக்கு இடமளிக்காதீர்கள்!

## பாதுகாப்புத் தரப்பினரிடம் ஜனாதிபதி வலியுறுத்து

இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப்பதவிப்பிரமாணம்செய்துகொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பாதுகாப்புத் தரப்பினரைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

பாதுகாப்புப் படைகளின் பிரதானி, முப்படைத் தளபதிகள் மற்றும் பதில் பொலிஸ்மா அதிபர் ஆகியோருடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் விசேட கலந்துரையாடலை அவர் மேற்கொண்டார்.

06

## பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலராக எயார் வைஸ் மார்ஷல் சம்பத் நியமனம்



பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளராக ஓய்வுபெற்ற விமானப்படையின் எயார் வைஸ் மார்ஷல் எச்.எஸ். சம்பத் துய்யகொந்த நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை ஜனநாயகக்

06




புதிய ஜனாதிபதியாகத் தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார திஸநாயக்கா நேற்றுப் பதவியேற்றமையை அடுத்து, தமிழ் சமூக ஊடகப் பதிவு ஒன்றில் ‘புதிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பதவியேற்றதில் முதலாவது மாற்றம்....!’ என்ற தலைப்பில் வந்த விடயம் இது:-

இலங்கையில் இதுவரை காலம் தேசிய கீதம் பாடப்படும் போது நாற்காலியை விட்டே பௌத்த துறவிகள் எழுந்திருப்பதில்லை.

2024 இலங்கை ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று இன்றையதினம் (நேற்றைய தினம்) இலங்கையின் 9 ஆவது ஜனாதிபதியாக அநுர குமார திஸநாயக்க பதவியேற்றார்.

இந்நிலையில் இதுவரைகாலமும் எழுந்திருக்காத பிக்குகள் இன்று தேசிய கீதம் பாடப்படும்போது எழுந்து நின்றனர்.

இந்த சம்பவமானது அநுரவின்

06




# வாக்களிக்க ஊருக்கு வந்தவர்கள் திரும்பிச் செல்ல முடியாது தவிப்பு

## நுவரெலியாப் பிரதேசத்தில் நிலைமை

(மஸ்கெலியா நிருபர்)

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் நுவரெலியாப் பிரதேசத்துக்கு வாக்களிக்க வந்த வாக்காளர்கள் போதிய போக்குவரத்து வசதியின்மையால் திரும்பிச் செல்ல முடியாது தவிக்கின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்கள் தங்களது வாக்களிப்பை முடித்து விட்டு நேற்றுத் தங்களது பணிக்கு செல்ல முடியாது தவித்தமையைக் காண முடிந்தது.

ஹட்டன் அரச, தனியார் பஸ் நிலையத்தில் ஆயிரக் கணக்கான பயணிகள் இவ்வாறு சிரமத்திற்கு உள்ளாகி இருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

ஹட்டன் அரச, தனியார் பஸ் நிலையம் அதிகளவில் வெளி மாவட்டங்களுக்கு பஸ் சேவைகளை முன்னெடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றனர் பயணிகள்.

# ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா வாழ்த்து



நாட்டின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திஸநாயக்கவிற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வாழ்த்து தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா  தனது வாழ்த்து செய்தியில் –

“சமூக பொருளாதாரம், அரசியல் மற்றும் ஜனநாயக அரசாட்சி உள்ளிட்ட துறைகளில் பல்வேறு சவால்கள் காணப்படுகின்றன. அவற்றிலிருந்து இலங்கையை மீட்டு நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.” – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த வாழ்த்து



புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய உள்ளிட்ட பல அரசியல் பிரமுகர்களும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது வாழ்த்து செய்தியில் –

“இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்ட அநுரகுமார திஸநாயக்கவுக்கு எனது வாழ்த்துக்கள்.

நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதிலும் ஐக்கியமான மற்றும் பலமான இலங்கையை உறுதி செய்வதிலும் அவர் வெற்றியடைய வாழ்த்துகிறேன்.” எனக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய தனது வாழ்த்து செய்தியில் –

“ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் ஜனநாயக மற்றும் அமைதியான தேர்தலுக்கு வாழ்த்துகள். முக்கியமான பொருளாதார மற்றும் நிர்வாக சீர்திருத்தங்களைக் கொண்டுவரும் அதே வேளையில், புதிய அரசாங்கம் சட்டத்தின் ஆட்சி மற்றும் தேசிய ஒற்றுமையை நிலைநிறுத்துவதற்கான அதன் ஆணையை செயல்படுத்தும் என்று நம்புகின்றோம்.” எனத் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் புதிய ஜனாதிபதிக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார் என்பது  குறிப்பிடத்தக்கது.





# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த உண்மையை வெளிக்கொணர்வேன்

## கொழும்பு பேராயரைச் சந்தித்து ஆசி பெற்ற புதிய ஜனாதிபதி அநுரகுமார உறுதியளிப்பு

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று திங்கட்கிழமை கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையைச் சந்தித்து ஆசி பெற்றார்.

பொரளையில் அமைந்துள்ள பேராயரின் உத்தியோக பூர்வ இல்லத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, பேராயரைச் சந்தித்து நலம் விசாரித்ததுடன் சிறிது நேரம் உரையாடலில் ஈடுபட்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை,

“இலங்கையின் பெரும்பான்மையான மக்களின் விருப்பத்தால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையில் தேவையான மாற்றத்தை ஏற்படுத்தும் பாரிய பொறுப்பை நாட்டு மக்கள் அவரிடம் ஒப்படைத்துள்ளனர். இது பொறுப்பு வாய்ந்த மற்றும் கடினமான பணியாக இருக்கலாம். அதற்காக அவருக்கு நாம் முழு ஆதரவையும் ஆசிகளையும் வழங்குவோம் என்று உறுதியளிக்கிறோம். குறிப்பாக இந்த நாட்டின் வறிய மக்களைப் பற்றி சிந்தித்து உங்கள் பணியைத் தொடருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.” – என்றார்.

இதன்போது, ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை,

“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்தவும் மற்றும் உண்மையை வெளியே கொண்டுவரத் தேவையான அடித்தளத்தைத் தயார் செய்ய முடிந்த அனைத்தையும் செய்வதாகவும் ஜனாதிபதி எனக்கு உறுதியளித்தார்.” – என்றார்.


கொழும்பு உயர் மறைமாவட் துணை ஆயர்களான மெக்ஸ்வெல் சில்வா ஆண்டகை, ஜே.டி. அந்தோனி ஆண்டகை, அன்டன் ரஞ்சித் ஆண்டகை, கொழும்பு பேராயர்களின் ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி, கொழும்பு பேராயரின் செயலாளர் அருட்தந்தை ஜோசப் இந்திக்க, பொருளாளர் அருட்தந்தை ஜூட் சமந்த பெர்னாண்டோ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி றியன்சி அர்சகுலரத்ன உள்ளிட்டோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.













# ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலதா மாளிகையில் விசேட வழிபாடு



இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக நேற்று காலை பதவிப்பிரமாணம் செய்து கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலதா மாளிகையில் விசேட வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார்.

இதனையடுத்து மல்வத்து, அஸ்கிரிய பீடாதிபதிகளை சந்தித்து ஜனாதிபதி ஆசி பெற்றுள்ளார்.









# தேர்தலுக்குப் பின்னர் இதுவரை எந்த முறைப்பாடுகளும் இல்லை

## பவ்ரல் அமைப்பு தகவல்



"தேர்தலுக்குப் பின்னரான காலப்பகுதியில் இதுவரை எந்தவித முறைப்பாடுகளும் பதிவாகவில்லை. வரலாற்றில் இடம்பெற்ற தேர்தல்களில் இந்த முறை ஜனாதிபதி தேர்தல் மிகவும் அமைதியான முறையில் இடம்பெற்றுள்ளது."

– இவ்வாறு சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டின் (பவ்ரல்) நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னரான முறைப்பாடுகள் தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இலங்கை வரலாற்றில் இதுவரை இடம்பெற்ற தேர்தல்களில் இடம்பெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தல் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றது. தேர்தல் இடம்பெற்ற பின்னர் பல்வேறு சட்ட மீறல்கள், வன்முறைகள் தொடர்பில் கடந்த காலங்களில் முறைப்பாடுகள் பதிவாகி இருக்கின்ற போதும் இந்த முறை ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் இதுவரை எந்த முறைப்பாடும் பதிவாகவில்லை.

அதனால் தேர்தலுக்கு பின்னரான இந்த காலப்பகுதியில் தொடர்ந்தும் அமைதியாக செயற்படுமாறு நாட்டு மக்களிடம் கேட்டுக்கொள்கிறோம். ஒட்டுமொத்த தேர்தல் காலப்பகுதியில் தேர்தல் சட்டமீறல்கள் மற்றும் பயமுறுத்தல், அச்சுறுத்தல்கள் என எமது பவ்ரக் நிறுவனத்துக்கு 1,800 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த முறைப்பாடுகளில் அரச அதிகாரம், அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக இடம்பெற்ற சம்பவங்களும் அதிகளவில் பதிவாகியுள்ளன.

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்காக தேர்தல் ஆணைக்குழுவானது, தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியிலிருந்து தேர்தல் தினத்தன்று வரைக்கும் முக்கிய பங்காற்றியுள்ளது. பொலிஸ்மா அதிபர் பதவி வெற்றிடம் காணப்பட்டாலும், தேர்தல் செயன்முறை முழுவதும் சட்டம், ஒழுங்கை வினைத்திறனாகப் பேணுவதற்கும், பக்கச்சார்பற்ற வகையில் செயலாற்றுவதை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கைப் பொலிஸ் திணைக்களம் ஏற்புடைய அனைத்து நிறுவனங்களுடனும் ஒத்துழைப்புடன் செயலாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதித் தேர்தலை ஒழுங்குபடுத்தல், தேர்தல் சட்டங்கள் மீறப்படுவதைக் குறைத்தல், வன்முறைகளைக் குறைத்தல் மற்றும் பிரஜைகளின் வாக்குரிமையைப் பாதுகாத்தமைக்காக தேர்தல் ஆணைக்குழுவுக்கும், இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கும் பவ்ரல் அமைப்பு தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. அமைதியான தேர்தலை நடத்துவதற்கு, குறிப்பாக ஜனநாயகத்தின் மீது ஆழ்ந்த அர்ப்பணிப்புக் கொண்டு ஒத்துழைப்பு நல்கிய பிரஜைகளுக்கு எமது நன்றிகளை தெவித்துக்கொள்கிறோம்."– என்றார்.

# கென்ய ஜனாதிபதியும் வாழ்த்துத் தெரிவித்தார்

கென்யாவின் ஜனாதிபதி வில்லியம் ருடோ, இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிற்குத் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்ததுள்ளார்.

அத்துடன், இரு நாடுகளுக்கும் இடையிலான நீடித்த இராஜதந்திர உறவுகளையும் அவர் வலியுறுத்தினார்.

கென்யாவின் ஜனாதிபதி கலாநிதி வில்லியம் ருடோ தமது வாழ்த்தில் –

2024 செப்டெம்பர் 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் வெற்றிகரமாக முடிவடைந்ததைத் தொடர்ந்து, இலங்கையின் புதிதாக தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிற்கு மனமார்ந்த வாழ்த்துக்கள். நாட்டை முன்னோக்கி வழிநடத்தும் அவரது தலைமையின் மீது இலங்கை மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். – என்றார்

பரஸ்பர மரியாதை மற்றும் நம்பிக்கையில் வேரூன்றிய கென்யாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்ட கால நட்புறவுகளையும் கென்ய ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கும், முக்கிய ஒத்துழைப்பு முன்னுரிமைகளை முன்னெடுப்பதற்கும், தெற்கு-தெற்கு ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும், கென்ய அரசாங்கத்துடன் இணைந்து, இலங்கையுடன் நெருக்கமாக பணியாற்றுவதற்கு அவர் தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளார்.



வர்த்தகம், முதலீடு, காலநிலை மாற்றம் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான மலிவு நிதிக்கான அணுகல் போன்ற துறைகளில் கூட்டு முயற்சிகளின் முக்கியத்துவத்தை ஜனாதிபதி ரூட்டோ அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளார்

முடிவில், அநுரகுமார திஸநாயக்கவுக்கும் இலங்கை மக்களுக்கும் நல்ல ஆரோக்கியம் மற்றும் செழிப்புக் கிட்ட ஜனாதிபதி ருடோ வாழ்த்தியுள்ளார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆட்சியில் இலங்கையில் மாற்றத்திற்கான அத்திவாரமாக அமைந்துள்ளதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர் – என்று அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா குறித்து தென்னிலங்கையில் மற்றொரு ஊடகவியலாளர் இந்தத் தகவலை தந்தார் :–

முன்னைய ஜனாதிபதிகள் போலவோ ஏனைய சிங்கள அரசியல்வாதிகள் போலவோ தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா பம்மாத்துக் காட்டுவதில்லை என்றார் அவர்.

மற்றைய ஜனாதிபதிகளும் அரசியல்வாதிகளும் பௌத்த பிக்குகளின் காலில் விழுந்து வணங்குவார்கள். ஆனால் அநுரகுமார திஸநாயக்கா குனிந்து கும்பிடு போடுவதுடன் அடங்கி விடுவார் என்றார் அவர்.

நடிப்புக்காகக் காலில் விழுந்து கும்பிடுவதும், தன்னைப் பெரும் ஆசார சீலர்களாகக் காட்டும் விதத்தில் பம்மாத்து விடுவதும் அர்த்தமற்றது என்று அவர் கூறினார்.

அநுராவின் இந்த வித்தியாசங்கள் வரவேற்கத்தக்கவைதான்...!

## வன்முறைகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது தேர்தல் காலத்தில் எந்தவித அசம்பாவிதமும் ஏற்படாமல் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்காக இந்தப் பயணத்தில் வன்முறைச் செயல்களுக்கு இடமளிக்க வேண்டாம் என்று இந்தச் சந்திப்பின் போது ஜனாதிபதி வலியுறுத்தினார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பாதுகாப்பு அமைச்சின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சோசலிசக் குடியரசின் அரசமைப்பின் 52 (ஐ) பிரிவின் ஊடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைவாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் இந்த நியமனம் நேற்று வழங்கப்பட்டுள்ளது.

சீன தேசிய பாதுகாப்புப் பல்கலைக் கழக பாதுகாப்புக் கல்வி தொடர்பான விஞ்ஞானப் பட்டதாரியான அவர், கொத்தலாவல தேசிய பாதுகாப்புப் பல்கலைக் கழக விஞ்ஞானப் பட்டதாரியுமாவார்.

எம்.ஐ. 24 தாக்குதல் ஹெலிகொப்டர் படையின் முன்னாள் கட்டளை அதிகாரி, அனுராதபுரம் விமானப்படைத் தளத்தின் முன்னாள் கட்டளை அதிகாரி, சீனதுறைமுக விமானப்படைக் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி, பாகிஸ்தானுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் மற்றும் கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தின் கட்டளை அதிகாரி மற்றும் விமானப்படைத் தலைமையகத்தில் முன்னாள் பயிற்சிப் பணிப்பாளரான அவர் வீரவிக்ரம விபூஷண ரணவிக்ரம மற்றும் ரண சூர பதக்கங்களையும் வென்றுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## வடக்கு மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வித்துள்ளார்.

இந்தத் தகவலை வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு நேற்று இரவு அறிவித்துள்ளது.

நாட்டின் புதிய ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க பதவியேற்றுள்ள நிலையில் பல்வேறு மாகாணங்களின் ஆளுநர்கள் தமது பதவிகளை இராஜிநாமா செய்து வருகின்றனர்.

இதற்கமைய வடக்கு மாகாணத்தின் ஆளுநரும் நேற்று இரவு தனது பதவியை இராஜிநாமா செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அரசியல் வாழ்க்கையினை முடிவுக்கு கொண்டுவருகிறேன்

## அலி சப்ரி அறிவிப்பு



வெளிவிவகார அமைச்சராக பணியாற்றிய அலிசப்ரி தனது அரசியல் வாழ்க்கையை முடிவிற்கு கொண்டுவரவுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடக பதிவில் அவர் இந்த விடயத்தை வெளியிட்டுள்ளார். அவர் அந்தப் பதிவில் மேலும் குறிப்பிடுகையில் –

"பொதுச்சேவையை நிறைவுசெய்யும் இவ்வேளையில் எனது முயற்சிகளை ஆதரித்த,வழிகாட்டிய மற்றும் ஆக்கபூர்வமாக விமர்சித்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

உங்கள் நம்பிக்கையும், ஊக்கமும் தான் இந்த பயணம் முழுவதும் என்னை தாங்கிய தூண்கள்.

2019 ஆம் ஆண்டு நான் அரசியலில் காலடி எடுத்து வைத்தபோது எனது நாட்டிற்கு சேவைசெய்ய குறிப்பாக நீதியமைச்சை சீர்செய்வதில், எனது வாழ்நாளின் பெரும்பகுதியை நான் அர்ப்பணித்த துறையில்,ஒரு தெளிவான பார்வையால் உந்தப்பட்டேன்.

நாங்கள் பயணிக்கப்போகும் பாதை எதிர்பாராதவிதமாக கரமுரடானதாக மாறுகின்றது. உலகமும் நாடும் விரைவில் அசாதாரண சவால்களின் பிடியில் சிக்கின.

கொவிட் 19 பெருந்தொற்றும்,அதன் பின்னர் உக்ரைனில் வெடித்த போரும்,அதன் தீவிரமான நீண்டவிளைவுகளும், சர்வதேச ஸ்திரதன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தின.இது எங்கள் நாட்டின் வரலாற்றில் மிக மோசமான நெருக்கடிக்கு வழிவகுத்தது. நாம் நினைத்து பார்க்க முடியாத வகையில் எங்களின் மீள் எழும் திறனை சோதனை செய்தது.

இந்த கடினமான காலங்களில் எனக்கு பல பதவிகளில் சேவையாற்றுவதற்கான கௌரவம் கிடைத்தது. நீதியமைச்சராக, நிதியமைச்சராக, இறுதியாக வெளிவிவகார அமைச்சராக. ஒவ்வொரு பதவியும் அவற்றிற்கே உரிய சவால்களுடன் வந்தன.

என் மீது வைக்கப்பட்ட நம்பிக்கையை நிறைவேற்றுவதற்கு நான் என்னால் முடிந்தளவிற்கு சிறப்பாக செயற்பட்டேன்.

வெளிவிவகார அமைச்சராக உலகளாவிய ரீதியில் தலைவர்கள், இராஜதந்திரிகள், சர்வதேச அமைப்புகளின் தலைவர்களை சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சியை நோக்கி நகர்வதற்கான இலங்கையின் முயற்சிகளின் போது அவர்களின் தளர்ச்சியற்ற ஆதரவும், இணைந்த செயற்பாடுகளும் எங்களிற்கு அளவிடமுடியாத பெறுமதி உடையவையாகக் காணப்பட்டன.

எங்களின் இருள்மயமான தருணங்களில் வெளிப்படுத்தப்பட்ட ஆதரவிற்காக நான் ஆழமான நன்றியுடையவனாகயிருக்கின்றேன்.

பொதுச்சேவை என்பது எப்போதும் இலகுவான பாதையில்லை. அதற்கு நேரமும் சக்தியும் மாத்திரமல்ல ஆழமான தியாகமும் அர்ப்பணிப்பும் அவசியம்.

ஒருவன் நேர்மையுடன் சேவையாற்ற முயலும்போது, அந்த தியாகங்கள் இன்னமும் பெரிய விடயங்களாக உணரப்படும்.

ஆனால் நான் எனது பயணத்தை பற்றி சிந்திக்கும்போது, எங்கள் தேசத்தின் சவாலான தருணங்களில் என்னால் வழங்கப்பட்ட பங்களிப்பு குறித்து (அது எவ்வளவு சிறியதாக காணப்பட்டாலும்) நான் பெருமிதம் கொள்கின்றேன்.

அரசியலில் ஈடுபடுவது என்பது எனக்கு இயல்பாக கிடைத்த ஒருபாதையில்லை. எதிர்பார்த்த, எதிர்பாராத பல சவால்களை எதிர்கொள்ளவேண்டியிருந்தது,.

ஆனால் இவற்றின் போது பல வருடங்களிற்கு முன்னர் எனது தந்தை வழங்கிய ஆலோசனையை நான் இறுக்கமாக பின்பற்றினேன். "உங்களால் கட்டுப்படுத்த முடிந்தவற்றை கட்டுப்படுத்துங்கள், கட்டுப்படுத்த முடியாதவை குறித்து நேரத்தை வீணடிக்க வேண்டாம்". இந்த வார்த்தைகள் எப்போதும் எனக்கு வழிகாட்டியுள்ளன. பாதை எதுவென்பது தெரியாத தருணங்களிலும் முன்னோக்கி இந்த வார்த்தைகள் எனக்கு உதவியுள்ளன.

தற்போது அரசியல் வாழ்க்கையிலிருந்து விலகும் இந்த தருணத்தில் எனது முதல் ஆர்வமான சட்ட துறையில் மீண்டும் ஈடுபடுவது குறித்து எதிர்பார்த்துள்ளேன்." – என்று குறிப்பிட்டுள்ளார்.

# இறுதி நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை இலங்கை மக்கள் தெரிவுசெய்துள்ளனர்

## சுனில் ஹந்துநெத்தி கூறுகின்றார்



இலங்கை தனது இறுதிநிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவுசெய்துள்ளது என ஜே.வி.பியின் மத்திய குழு உறுப்பினர் சுனில்ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

இந்த ஜனாதிபதியின் பதவிக்காலத்திற்கு பின்னர் நீங்கள் நிறைவேற்றதிகார ஜனாதிபதிமுறையை பார்க்கமாட்டீர்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கும் அரசியல் உறுதிப்பாடுடைய ஒருவர் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நோக்கத்திற்கு மக்கள் தங்களின் ஆதரவைத் தரவேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம் என தெரிவித்துள்ள சுனில் ஹந்துநெத்தி நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்பதை உறுதி செய்துள்ளார்.

# அரியநேத்திரனைத் தமிழ் மக்கள் ஒரு பொருட்டாகவே கருதவில்லை

## இப்படி விளக்குகின்றார் சுமந்திரன் எம்.பி.



"நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் அரியநேத்திரன் தமிழ் மக்களால் ஒரு பொருட்டாகவே கருதப்படவில்லை என்பது நிரூபணமாகியிருக்கின்றது."

– இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.தெரிவித்திருக்கிறார்.

"ஜனாதிபதித் தேர்தலும் தமிழ்ப் பொது வேட்பாளரும்" என்ற தலைப்பில் தாம் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றிலே அவர் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

அதில் அவர் கூறியிருப்பவை வருமாறு:-

2024 ஜனாதிபதி தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தவேண்டும் என்ற எண்ணக்கரு உதயமான பொழுதிலிருந்தே அதனை மிகக் கடுமையாக நான் எதிர்த்தது அனைவரும் அறிந்ததே. அவ்வெதிர்ப்புக்கான காரணங்கள் பல தருணங்களிலே வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும் இச் சமயத்திலே மீண்டும் அவற்றை நினைவுபடுத்துவது நல்லது என்று நினைக்கின்றேன்.

1. கள யதார்த்தத்தின் படி இதில் வெற்றிபெற முடியாதென்பதை எவரும் மறுத்துரைக்க முடியாது.

2. அப்படியான சூழ்நிலையில் தேவையில்லாத இந்த விஷப்பரீட்சையை செய்து தோற்பதன் விளைவு என்ன?

3. தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷை இனியும் நிரூபிக்கப்பட வேண்டியதொன்றல்ல. அப்படியிருக்க இந்த நேரத்தில் இதைச் செய்வது எவரும் இதுவரை கேள்விக் குட்படுத்தாத எமது அரசியல் நிலைப்பாட்டை காட்டிக் கொடுப்பதாகவே இருக்கும்.

4. 2022 மக்கள் போராட்டத்தின் பின்னரான இன்றைய சூழ்நிலையில் சிங்கள – பௌத்த இனவாதம் மிகவும் கீழ்நிலையை அடைந்துள்ளது. பிரதான வேட்பாளர் ஒருவர் கூட இனவாதத்தை தூண்டாத விதத்தில் நாம் அவர்களோடு பேரம் பேசுவதற்கான வாய்ப்பு அதிகரித்திருக்கிறது.

5. இரண்டு பிரதான வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற தருணத்தை விட, மூன்று பேர் வெற்றி வாய்ப்புள்ளவர்களாக காணப்படும் போது எமது பேரம்பேசும் சக்தி பன்மடங்காக அதிகரித்துள்ளது.

6. இப்படியான அருமையான சந்தர்ப்பங்களை நழுவவிடாமல் எமது மக்கள் நலன் சார்ந்து எமக்கு எஞ்சியிருக்கின்ற ஒரே பலமான வாக்குரிமையை பேரம்பேசி பயன்படுத்துதல் வேண்டும்.

இலங்கை தமிழரசுக்கட்சி எத்தருணத்திலும் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துகிற முயற்சியில் பங்கெடுக்கவில்லை. மாறாக பிரதான வேட்பாளர்கள் மூவரோடும் கட்சியின் முடிவின்படி உத்தியோகபூர்வமாக பேச்சுவார்த்தைகளை நடத்தினோம். எமது கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் ஒருவரைத் தமிழ்ப் பொது வேட்பாளராக நிறுத்திய போது அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை ஆரம்பித்து, அவருக்கு சார்பாகப் பிரச்சாரம் செய்யும் எமது கட்சி உறுப்பினர்களை எச்சரித்தோம். பிரதான வேட்பாளர்கள் மூவரினதும் தேர்தல் அறிக்கைகள் வெளிவந்தவுடனேயே எமது மத்திய செயற்குழு கூடி அவற்றை ஆராய்ந்தது. இந்த விடயங்கள் சம்பந்தமாக ஆராய்ந்த ஐந்தாவது கூட்டம் 01.09.2024 அன்று வவுனியாவில் கூடி பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றினர்.

1. தமிழ்ப் பொது வேட்பாளராக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் பா. அரியநேத்திரனுக்கு நாம் ஆதரவளிப்பதில்லை.

2. தேர்தலிலிருந்து விலகிக் கொள்ளுமாறு அரியநேத்திரனைக் கோருவது.

3. ஜனாதிபதி தேர்தல் 2024 இல் இலங்கை தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது.

எமது கோரிக்கைக்கு அமைவாக வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்கள் வாக்களித்ததன் காரணமாக ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் திரு. சஜித் பிரேமதாஸ் வெற்றி பெற்றிருக்கின்றார். வடக்கு, கிழக்கிலே அண்ணளவாக 80 வீதத்தினர் நாம் அடையாளம் கண்ட மூன்றுபிரதான வேட்பாளர்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள். இதுஎமது கட்சி எடுத்த நிலைப்பாட்டிற்கான மாபெரும் அங்கீகாரம். மாறாக, அரியநேத்திரனுக்கு வடக்குகிழக்கில் 14 வீதத்திற்கும் குறைவாகவே வாக்குகள் கிடைத்துள்ளன. மிகக் குறைவான அளவு வாக்குகளைப்பெற்றதன் மூலமும், பிரதான தமிழ்க் கட்சியான இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆதரவு மறுக்கப்பட்ட நிலையிலும், அரியநேத்திரனின் படுதோல்வி தமிழ் மக்களின் தோல்வியாக சித்தரிக்கப்படுவதிலிருந்து தப்பியிருக்கின்றது. 1982 ஆம் ஆண்டு குமார் பொன்னம்பலம் மொத்த வாக்குகளில் 2.67 வீத வாக்குகளைப் பெற்றிருந்தார். வெறும் 1.69 வீத வாக்குகளையே பெற்றதன் மூலம் அரியநேத்திரன் தமிழ் மக்களால் ஒரு பொருட்டாகவே கருதப்படவில்லை என்பது நிரூபணமாகியிருக்கின்றது. இந்தத் தடவை மக்களது மதி நுட்பத்தால் இந்தப் பெரும் அபாயத்திலிருந்து நாம் தப்பித்துக்கொண்டுள்ளோம். இனிமேலும் இவ்விதமான விபரீத விளையாட்டுக்களில் ஈடுபட வேண்டாம் என்று தமிழ்ப் பொதுக் கட்டமைப்பினர் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொள்வோரிடம் விநயமாகக் கேட்டுக் கொள்கின்றேன். – என்று உள்ளது.

# பரீட்சை வினாத்தாள் முறைகேடு; சந்தேகநபருக்கு விளக்கமறியல்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் முறைகேடு தொடர்பில் கைது செய்யப்பட்ட தேசிய கல்வி நிறுவகத்தின் திட்டமிடல் பிரிவின் பணிப்பாளர் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடுவலை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று சந்தேகநபர் முன்னிலைப்படுத்தப்பட்டமையை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் கசிந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பெற்றோர் குழுவொன்று முறையான விசாரணையைக் கோரி குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னதாக முறைப்பாடு செய்திருந்தது.

இதனையடுத்து, மேற்படி சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களமும் பரீட்சைகள் திணைக்களமும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன.

இந்த நிலையிலேயே, மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் திட்டமிடல் பிரிவின் பணிப்பாளர், குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அநுரவின் கனவு

புதிய ஜனாதிபதியாகத் தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார திஸநாயக்கா பதவியேற்றமையை அடுத்து, ஜே.வி.பி. மத்திய குழு உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

இலங்கை தனது இறுதி நிறைவேற்றதிகார ஜனாதிபதியைத் தெரிவுசெய்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஜனாதிபதியின் பதவிக்காலத்திற்கு பின்னர் நீங்கள் நிறைவேற்றதிகார ஜனாதிபதிமுறையை பார்க்கமாட்டீர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை நீக்கும் அரசியல் உறுதிப்பாடுடைய ஒருவர் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நல்லது. அவர் கூறுகின்றமை போல நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவதில் உறுதிப்பாடுடைய ஒருவர் ஜனாதிபதியாக வந்திருக்கின்றார் என்பது உண்மையாக இருந்தாலும், அந்த உறுதிப்பாடு மட்டும் நிறைவேற்றதிகார அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றி அமைப்பதற்குப் போதுமானதா என்ற கேள்வி எழுகின்றது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றுவது என்பது சட்ட ரீதியாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதற்கான அரசமைப்புத் திருத்தம் அல்லது புதிய அரசமைப்பு உருவாக்கம் அவசியமானது.

அந்த வேலையை எழுந்தமானமாக ஜனாதிபதி பதவியில் இருப்பவர் மட்டும் தனித்துச் செய்து விட முடியாது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை மாற்றத்தை அரசமைப்பு திருத்தமாக செய்வதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு முதலில் தேவை.

அத்தோடு இது அரசமைப்பின் அடிப்படை பிரிவுகளுக்கு செய்யப்படும் மாற்றம் என்பதால் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களின் அனுமதியும் அதற்குப் பெறப்பட வேண்டும்.

பெரும்பாலும் இன்று கலைக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் தற்போதைய நாடாளுமன்றத்தில் ஆக மூன்றே மூன்று உறுப்பினர்களை கொண்டிருக்கும் தேசிய மக்கள் சக்தி, இனிப் பொதுத் தேர்தலின் பின்னர் வரும் நாடாளுமன்றத்தில் குறைந்தது 150 உறுப்பினர்களின் ஆதரவை திரட்டினால் மாத்திரமே நாடாளுமன்றத்தில் இந்த அரசமைப்பு மாற்றத்திற்கு அதனால் அங்கீகாரத்தைப் பெற முடியும்.

அதன் பின்னர்தான் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறை மாற்றத்திற்கான சர்வஜன வாக்கெடுப்புக்கு மக்களின் முன்னால் செல்ல முடியும். அவர்களின் ஆதரவைத் திரட்ட முடியும்.

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வெற்றியை அடுத்து, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அக்கட்சிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் அனைத்தும் பொதுக் கட்டமைப்பில் ஒன்றிணைந்து ஐக்கியமாகத் தேர்தலை எதிர்கொள்ள முன்வர வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க கோரி இருக்கின்றார்.

அப்படி எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து செயலாற்றும் நிலைமை உருவானால், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் கட்சியினர் நாடாளுமன்றத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையைப் பெறும் தரப்பாக உயர்வது கூட மிக கஷ்டமானது என்பது கண்கூடு.

நிறைவேற்றதிகாரஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்பதில் தீவிரமாக உள்ள தரப்புகளை ஒன்றிணைத்து, ஒரு கட்டமைப்பாக உருவாக்கி, வரும் தேர்தலில் உறுதியுடன் செயல்பட்டால்தான் இந்த அரசமைப்பு மாற்றத்தை தேசிய மக்கள் சக்தியினால் செய்ய முடியும். அதுவரையில் அந்தத் தரப்பு நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை மாற்றுவது என்று கூறுவது கொட்டாவி விட்டபடி கனவு காணும் வேலையாகத்தான் இருக்க முடியும்.

## திருப்பதி லட்டு விவகாரம்:

# விசாரணைக் குழு அமைக்க கோரி சுப்பிரமணியன் சுவாமி மனு தாக்கல்



திருப்பதி லட்டு விவகாரம் தொடர்பாக நீதிமன்ற கண்காணிப்பின் கீழ் விசாரணை நடத்த உத்தரவிடக் கோரி சுப்பிரமணியன் சுவாமி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்துள்ளார். அதில், திருப்பதி லட்டு தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட நெய்யில் விலங்குகளின் கொழுப்பு சேர்க்கப்பட்டதாக எழுந்துள்ள சர்ச்சை தொடர்பாக விசாரிக்க சுதந்திரமான குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றும், அந்தக் குழுவின் செயல்பாடுகளை உச்ச நீதிமன்றம் கண்காணிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

“திருப்பதி திருமலை கோயில் பிரசாதத்தில் விலங்குகளின் இறைச்சி மற்றும் பிற அழுகிய பொருள்கள் கலப்படம் செய்யப்பட்டதாக ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு முன்வைத்துள்ள ஆதாரமற்ற குற்றச்சாட்டை விசாரிக்க உத்தரவிடக் கோரி உச்ச நீதிமன்றத்தில் இன்று நான் பொதுநல மனு தாக்கல் செய்தேன்” என்று தெரிவித்துள்ளார்.

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் முன்னாள் தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான ஒய்.வி.சுப்பா ரெட்டியும், இந்த விவகாரம் தொடர்பாக ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதியின் கீழ் ஒரு விசாரணைக் குழுவை அமைத்து விசாரிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

## ‘நீங்கள் இந்தியாவின் தூதுவர்கள்’

# அமெரிக்க வாழ் இந்தியர்களில் மத்தியில் பிரதமர் மோடி உரை







அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடைபெற்ற அமெரிக்க வாழ் இந்தியர்கள் உடனான சந்திப்பில் பிரதமர் மோடி பங்கேற்றார். அப்போது அங்கே திரண்டிருந்தவர்களை நோக்கி ‘நீங்கள் இந்தியாவின் தூதுவர்கள்’ என அவர் தெரிவித்தார்.

மூன்று நாள் பயணமாக பிரதமர் மோடி அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா அங்கம் வகிக்கும் குவாட் கூட்டத்தில் பங்கேற்றார்.

அமெரிக்கா சென்ற அவருக்கு அங்குள்ள இந்தியர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி இல்லத்தில் ஜனாதிபதி ஜோ பைடனை சந்தித்தார்.

அமெரிக்க நேரப்படி ஞாயிற்றுக் கிழமை நியூயோர்க் நகரில் அமெரிக்க வாழ் இந்தியர்கள் மத்தியில் பேசினார். ‘மோடி அண்ட் யுஎஸ்’ என இந்த சந்திப்பு அறியப்பட்டது. இதில் சுமார் 13,000 இந்தியர்கள், இந்திய வம்சாவளியினர் பங்கேற்றனர். இதன்போது அவர் உரையாற்றுகையில்,

” இந்திய சமூகத்தின் வசம் உள்ள திறன்கள் குறித்த புரிதல் எனக்கு ஆழமாக உள்ளது. நான் ஆட்சி அதிகாரத்தில் இல்லாத போதிலும் அதை அறிந்துள்ளேன். நீங்கள் இந்தியாவின் வலுவான தூதுவர்கள். இந்தியர்கள் ஆகிய நாம் பல்வேறு மொழிகள், மத ரீதியிலான நம்பிக்கைகள் கொண்டிருந்தாலும் ஒற்றுமையாக முன்னேறி வருகிறோம்.

இந்திய தேசம் வாய்ப்புக்காக காத்திருக்கும் காலம் கடந்து வாய்ப்புகளை வழங்கி வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில் பல்வேறு துறைகளை இந்தியா இதனை செய்துள்ளது சான்று. உலகில் இந்தியா அழுத்தத்தை அதிகரிக்க விரும்பவில்லை. மாறாக அதன் தாக்கத்தை அதிகரிக்க விரும்புகிறது. நாம் ஆதிக்கம் செலுத்த விரும்பவில்லை. உலக வளர்ச்சிக்காக ஒத்துழைப்பை அதிகரிக்க விரும்புகிறோம்.

இந்தியா பேசினால் உலகம் கவனிக்கும். தெற்கின் வலுவான குரலாக நாம் உள்ளோம். உலகில் பேரிடர் நிகழ்ந்தால் இந்தியா தான் முதலில் உதவுகிறது. கொரோனா சமயத்தில் சுமார் 150 நாடுகளுக்கு நாம் தடுப்பூசி மற்றும் மருந்துகளை விநியோகித்தோம்.

அறிவு பகிர்வதற்கும், செல்வம் அக்கறைக்கும், அதிகாரம் பாதுகாப்பதற்கும் என இந்தியா கருதுகிறது.”– என்றார்.

# லெபனான் மீது இஸ்ரேல் கடும் தாக்குதல்: உயிரிழப்பு எண்ணிக்கை 274 ஆக அதிகரிப்பு



லெபனானில் புதிதாக இஸ்ரேல் நடத்திய ஏவுகணை தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 274 ஆக அதிகரித்துள்ளது. இதில் பெண்கள், குழந்தைகளும் அடங்குகின்றனர். மேலும், 1000 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என உறுதியான தகவல்கள் தெரிவிக்கின்றன.

போர்ப் பதற்றம் மென்மேலும் வலுத்துள்ளதால், தெற்கு லெபனானில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறி வருகின்றனர். தெற்கு துறைமுக நகரமான சிடோனில் உள்ள பிரதான நெடுஞ்சாலையில் பெய்ரூட் நோக்கி செல்லும் பகுதியில் கார்கள் நிரம்பியுள்ளதாக கூறப்படுகிறது. அதோடு, அப்பகுதியில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் மாற்று இடங்களாக மாற்றப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

லெபனான் பொதுமக்கள் பயன்படுத்தும் செல்போன்களில் பலரின் போன்களுக்கு இஸ்ரேல் எஸ்.எம்.எஸ்களை அனுப்பியுள்ளது. இதில் குறிப்பிட்ட வரைபடத்தை பகிர்ந்துள்ளதாகவும், அங்கு ஹிஸ்புல்லா அமைப்பின் ஆயுதங்கள் இருப்பதாகவும், எனவே அங்கெல்லாம் குண்டு வீசப்போகிறோம் என்றும் கூறியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதனால் மக்கள் அச்சத்தில் உள்ளனர். இஸ்ரேலின் இச்செயலுக்கு ஹமாஸ் உள்ளிட்ட அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன. “லெபனான் சகோதரர்கள். எங்கள்



மக்களுடன் இருப்போம்” என ஹமாஸ் தெரிவித்துள்ளது.

ஹிஸ்புல்லாவுக்கு எதிரான நடவடிக்கையை இஸ்ரேல் தீவிரப்படுத்துவதால், இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இஸ்ரேலியர்கள் ஒற்றுமையாக இருக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

லெபனானில் இஸ்ரேல் நடத்திய ‘மோசமான’ வான்வழித் தாக்குதல்களை ஈரான் கண்டித்துள்ளது. முன்னதாக, ஹிஸ்புல்லா இயக்கத்தினரின் ஆதிக்கம் நிறைந்த லெபனானின் தெற்கு பகுதியில் இருந்து உடனடியாக வெளியேறும்படி பொதுமக்களுக்கு இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்திருந்தது கவனிக்கத்தக்கது.

# ஹிஸ்புல்லா மனித கேடயங்களாக பயன்படுத்துகிறது; லெபனான் மக்களுக்கு இஸ்ரேல் பிரதமர் எச்சரிக்கை



“இஸ்ரேலின் யுத்தம் லெபனான் மக்களுடனானது அல்ல. அது ஹிஸ்புல்லா உடனானது. நீண்டகாலமாக ஹிஸ்புல்லா உங்களை மனித கேடயங்களாக பயன்படுத்தி வருகிறது.”

– இவ்வாறு இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

லெபனானில் நேற்று புதிதாக இஸ்ரேல் நடத்திய ஏவுகணை தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 274 ஆக அதிகரித்துள்ளது. தெற்கு லெபனானில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறி வருகின்றனர். இஸ்ரேலின் இச்செயலுக்கு ஹமாஸ் உள்ளிட்ட அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில், லெபனான் மக்களுக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது எக்ஸ் பக்கத்தில் காணொலிச் செய்தி ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“லெபனான் மக்களுக்கு நான் ஒரு செய்தியை கூற விரும்புகிறேன். இஸ்ரேலின் யுத்தம் உங்களுடன் அல்ல. அது ஹிஸ்புல்லா உடனானது. நீண்டகாலமாக ஹிஸ்புல்லா உங்களை மனித கேடயங்களாக பயன்படுத்தி வருகிறது. உங்களுடைய அறைகளில் ரொக்கெட்டுகளையும், கேரேஜ்களில் ஏவுகணைகளையும் வைத்திருக்கிறது.

அந்த ரொக்கெட்டுகளும், ஏவுகணைகளும் நேரடியாக எங்கள் நகரங்கள் மீதும் எங்கள் குடிமக்கள் மீதும் குறி வைக்கப்பட்டன. ஹிஸ்புல்லாவின் தாக்குதலில் இருந்து எங்கள் மக்களை பாதுகாக்க நாங்கள் இந்த் ஆயுதங்களை அப்புறப்படுத்த வேண்டும். இன்று காலை முதல், ஆபத்தில் இருந்து விலகிச் செல்லுமாறு உங்களை இஸ்ரேலிய இராணுவப் படை எச்சரித்தது. இந்த எச்சரிக்கையை தீவிரமாக எடுத்துக் கொள்ளுமாறு நான் உங்களை வலியுறுத்துகிறேன்.

உங்களுடைய உயிர்களுக்கும் உங்கள் அன்புக்குரியவர்களின் உயிர்களுக்கும் ஹிஸ்புல்லா ஆபத்தை ஏற்படுத்த அனுமதிக்காதீர்கள். லெபனானுக்கு ஹிஸ்புல்லா ஆபத்தை ஏற்படுத்த அனுமதிக்காதீர்கள். தயவுசெய்து ஆபத்திலிருந்து இப்போதே விலகிச் செல்லுங்கள். எங்களுடைய ஒபரேஷன் முடிந்ததும், நீங்கள் உங்களுடைய வீடுகளுக்கு திரும்பலாம்.” என்று தெரிவித்துள்ளார்.



# இணைந்து செயற்பட வருமாறு ஐக்கிய மக்கள் சக்திக்கு அழைப்பு விடுப்பதற்கு ஐக்கியதேசிய கட்சி தீர்மானம்

பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக இணைந்து செயற்படுவதற்கு ஐக்கிய மக்கள் சக்திக்கு அழைப்பு விடுப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்துள்ளது.

நேற்று மாலை இடம்பெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் விசேட கூட்டமொன்றில் இது குறித்து தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இந்த கூட்டம் இடம்பெற்றுள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் இணைந்து போட்டியிடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்திக்கு அழைப்பு விடுப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலை முன்னிட்டு இரு கட்சிகளும் இணைந்து செயற்படவேண்டும் எனப் பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளை தொடர்ந்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஐக்கிய தேசிய கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு எதிரான வலுவான கூட்டணியை அமைப்பதற்கு ஏனைய கட்சிகளிற்கு அழைப்பு விடுப்பதற்கும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.



# புதிய ஜனாதிபதி அநுரவுக்கு உகண்டா ஜனாதிபதி வாழ்த்து

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அனுரகுமார திஸநாயக்கவிற்கு உகாண்டா ஜனாதிபதி ஜெனரல் யோவேரி ககுதா முசெவேனி தனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி முசெவேனி தனது செய்தியில், திஸாநாயக்கவின் தலைமைத்துவத்தை பாராட்டியமையுடன், நாட்டை முன்னோக்கி வழிநடத்துவதற்கு இலங்கை மக்கள் அவர் மீது வைத்துள்ள நம்பிக்கையை அங்கீகரித்துள்ளார்.

பரஸ்பர மரியாதை மற்றும் ஒத்துழைப்பின் அடிப்படையில் உகாண்டாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால மற்றும் இணக்கமான உறவுகளை ஜனாதிபதி முசெவேனி எடுத்துரைத்துள்ளார்.

இருதரப்பு உறவுகளை ஆழப்படுத்துவதற்கும், குறிப்பாக வர்த்தகம், முதலீடு மற்றும் நிலையான வளர்ச்சி போன்ற துறைகளில் ஒத்துழைப்பிற்கான புதிய வழிகளை ஆராய்வதற்கும் உகாண்டாவின் உறுதிப்பாட்டை அவர் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்.

தனது செய்தியை நிறைவு செய்த உகாண்டா தலைவர், ஜனாதிபதி திஸநாயக்க தனது புதிய பாத்திரத்தில் வெற்றியடைய வாழ்த்தியதுடன், இலங்கை மக்களுக்கு தொடர்ந்து அமைதி மற்றும் செழிப்பு ஏற்பட தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.




# தமிழ்ப் பொது வேட்பாளருக்குக் கூடிய விருப்பு வாக்குகள் இது தமிழ்த் தேசியத்திற்கு கிடைத்த பெரும் வெற்றியாகும்

## மெச்சுகின்றார் அரியநேத்திரன்

வடக்கு, கிழக்கிலுள்ள தமிழர்களே பல கட்சிகளில் இருந்து தமிழ் தேசிய அரசியலை தோற்கடிப்பதற்காக பல முயற்சிகளையும் பல பிரசாரங்களையும் செய்தபோதும் அவர்களை முறியடித்து இந்தத் தேர்தலில் மக்கள் வாக்களித்திருக்கின்றனர் என ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் பிரிந்து இருந்தாலும். கருத்து முரண்பாடுகள் காரணமாக சில பிரசாரங்களை மேற்கொண்டாலும் கூட ,இனிவரும் காலங்களில் அந்த முரண்பாடுகளை தவிர்த்து நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு குடையின் கீழ் ஒரு ஒரு சின்னத்தில் போட்டியிடுவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்ற பகிரங்க அழைப்பினையும் விடுத்தார்.

மட்டக்களப்பு அம்பிளாந்துறையில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர் –

ஒன்பதாவது ஜனாதிபதியாக அநுரகுமார திஸநாயக்க தெரிவு செய்யப்பட்டு இன்றைய தினம் பதவி ஏற்றார். அவருக்கு வேட்பாளர் என்ற சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொதுக் கட்டமைப்பாக சிவில் அமைப்புகளும் தமிழ் தேசிய கட்சிகளும் ஒன்றிணைந்து பொது வேட்பாளராக என்னை நிறுத்தியமையுடன், இரண்டு இலட்சத்துக்கு அதிகமான வாக்குகளை மக்கள் எனக்கு வழங்கியிருக்கின்றார்கள். அதற்கு இந்த மக்களுக்கு முதற்கண் நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜனாதிபதி தேர்தல் 1978 ஆம் ஆண்டு புதிய அரசியல் யாப்பின் பிரகாரம் கொண்டு வரப்பட்டு 1982 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை அந்த 9 ஜனாதிபதி தேர்தல்களில் பல தமிழர்கள் போட்டியிட்டு இருக்கிறார்கள். குமார் பொன்னம்பலம் 1982 ஆம் ஆண்டு போட்டியிட்டிருக்கின்றார்.

அதன் பின் சிவாஜிலிங்கம் அவர்கள் இரண்டு முறை போட்டியிட்டு இருக்கிறார். அவர் தனி வேட்பாளராக போட்டியிட்டாலும் இம்முறை தேர்தலில் ஒரு பொதுவேட்பாளராக பலரின் முயற்சியின் காரணமாக தமிழ் தேசிய கட்சிகளின் அரசியலில் மையப்படுத்தி இந்த தேர்தல் இடம்பெற்றது.

அதனடிப்படையில் என்றும் இல்லாதவரை இலங்கை வரலாற்றில் ஒரு தமிழர் என்கின்ற வகையில் தமிழ் தேசியம் தொடர்ச்சியாக இறுதிப்பதற்காக மக்கள் வாக்களித்திருக்கின்றார்கள். இணைந்த வடகிழக்கில் உறுதியாக இருக்கின்றார்கள், இணைந்த வடகிழக்கு தான் தமிழர்களின் அரசியல் தீர்வு என்பதனை இந்த தேர்தல் வெளிக்காட்டி இருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற என்னை இந்த தேர்தலில் பொது வேட்பாளராக நிறுத்திய போது, கிழக்கு மாகாணத்தை விட வட மாகாணத்தில் மக்கள் அதிகூடிய வாக்குகளை அளித்திருக்கின்றார்கள். அதில் விசேடமாக அவர்களுக்கு நன்றி கூறக்கூடியவர்களாக இருக்கின்றோம். பொது வேட்பாளரை தோற்கடிப்போம் என்று கூறியவர்களை நாங்கள் வென்றிருக்கின்றோம்.

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திஸநாயக்கவிடம் நாங்கள் சில செய்திகளை கூற விரும்புகின்றோம். அவருடைய தேர்தல் விஞ்ஞாபனம் அரசியல் விடயங்களை பார்க்கின்றபோது, கடந்த காலங்களில் பல்வேறுபட்ட இனவாத நடவடிக்கைகளை, பல முரண்பட்ட கருத்துக்களை கூறியிருந்தாலும் கூட, தற்போது ஒன்பதாவது ஜனாதிபதியாக அவர் பதவியேற்று இருக்கின்றார்.

உண்மையில் இணைந்த வட கிழக்கில் ஒரு அரசியல் தீர்வை தருவதற்கான அந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மேற்கொள்வார் என்கின்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

தமிழ் பொது வேட்பாளருக்கு ஆகக்கூடிய விருப்பு வாக்கு கிடைத்தது தமிழ்த் தேசியத்திற்கு கிடைத்த வெற்றியாக இருக்கின்றது. – என்றார்.

# அநுரவுக்கு ஆசி வேண்டி மாவை கோவிலில் பூஜை

புதிய ஜனாதிபதியாக அநுரகுமர திஸநாயக்க பதவியேற்றுள்ள நிலையில், அவருக்கு ஆசி வேண்டி வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி கோயிலில் பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

இன்று பிற்பகல் தேசிய மக்கள் சக்தியின் காங்கேசன்துறை தொகுதி அமைப்பாளர் ராஜபாலன் பிரகாஸ்பதி ஏற்பாட்டில் இந்தப் பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொடர்ந்து மாவிட்டபுரம் சந்தியில் கட்சியின் ஆதரவாளர்களால் பொதுமக்களுக்கு இனிப்பு பண்டங்கள் வழங்கப்பட்டன.



# யாழில் கடலுக்குச் சென்றவர் வள்ளத்தில் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணத்தில் வள்ளத்தில் கடற்தொழிலுக்குச் சென்ற குடும்பஸ்தர் வள்ளத்தில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அராலி மத்தியைச் சேர்ந்த சி. நாகராசா (வயது 53) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அராலியில் இருந்து கடற்தொழிலுக்காக வள்ளத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை கடலுக்குச் சென்றவர் நேற்று திங்கட்கிழமை காலை வரையில் கரை திரும்பவில்லை.

அதனையடுத்து சக தொழிலாளிகள் மற்றும் உறவினர்கள் அவரைக் கடலில் தேடிய நிலையில், பொன்னாலை கடற்கரைப் பகுதியில் அவரது வள்ளம் கரையொதுங்கி இருந்ததைக் கண்ணுற்று அங்கு சென்ற பார்த்த போது வள்ளத்தினுள் அவர் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குத் தகவல் அளிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

# இரத்தினபுரி தோட்டம் ஒன்றில் பட்டாசு கொளுத்தி அட்டகாசம்!

## தட்டிக் கேட்ட தொழிலாளியும் மகளும் வைத்தியசாலையில்

**(ஶ்ரீநிவாசகம் இரவீந்திரன்)**

இரத்தினபுரி மாவட்டம், நிவித்திகலை பொலிஸ் பிரிவிலுள்ள தொளஸ்வலை தோட்டத்தில் தோட்டத் தொழிலாளர்கள் வசிக்கும் குடியிருப்புகள் மீது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிலர் பட்டாசு கொளுத்தி வீசி அட்டகாசம் செய்துள்ளனர். இதனால் அந்தத் தோட்ட மக்கள் அச்சத்துடன் காணப்படுகின்றனர்

கடந்த சனிக்கிழமை இரவு ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட வேளையில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

எவ்வித சேதங்களும் ஏற்படாத போதிலும் குடியிருப்பில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தைகள், சிறுவர்கள், வயோதிபர்கள் உள்ளிட்ட பலரும் பயந்து அலறினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் பட்டாசு கொளுத்தி வீசிய பெரும்பான்மையினரிடம் பாதிக்கப்பட்டவர்கள் வினவியபோது, அந்தத் தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளி ஒருவரை அவர்கள் தாக்கியுள்ளனர். இதனைத் தடுக்கச் சென்ற அவரது மகளையும் அவர்கள் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த தந்தையும் மகளும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்

இது தொடர்பில் நிவித்திகலை பொலிஸில் முறைபாடு செய்யப்பட்டுள்ளது,

# பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக சேனவிரத்ன நியமனம்

இலங்கை ஜனநாயகக் சோசலிசக் குடியரசின் அரசமைப்பின் உப சரத்து 52 (1) இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக டி.டபிள்யூ.ஆர்.பி. ரவி செனவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.



ரவி செனவிரத்ன, கொழும்பு பல்கலைக்கழகத்தில் மனித உரிமைகள் தொடர்பில் முதுமாணிப் பட்டம் பெற்றவராவார்.

ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரான அவர், விசேட அதிரடிப் படையின் ஆரம்பகால உறுப்பினராகவும், அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதிப் பணிப்பாளராகவும், தாய்லாந்துக்கான இலங்கைத் தூதரகத்தின் முன்னாள் முதல் செயலாளராகவும், இன்டர்போல் இலங்கைக் கிளையின் முன்னாள் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பிரத்தியேக செயலாளராக கே. ஆனந்த விஜயபால நியமிக்கப்பட்டுள்ளார்.



# மல்வத்து, அஸ்கிரி மகா நாயக்க தேரர்களை நேற்று சந்தித்து ஆசி பெற்றார் அநுரகுமார

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று திங்கட்கிழமை பிற்பகல் வரலாற்றுச் சிறப்புமிக்க தலதா மாளிகைக்கு விஜயம் செய்து வழிபட்ட பின்னர் மல்வத்து மற்றும் அஸ்கிரி மகா நாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்றார்.

முதலில் மல்வத்து மகா விகாரைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, மல்வத்து மகாநாயக்க தேரர் அதி வணக்கத்துக்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கல தேரரைச் சந்தித்து நலம் விசாரித்ததுடன், அவருடன் சிறிது நேரம் உரையாடினார்.

இதன்போது அவர் செத்பிரித் பாராயணம் செய்து, ஜனாதிபதியின் எதிர்காலப் பணிகளுக்காக ஜனாதிபதிக்கு ஆசி வழங்கினார்.

அதன் பின்னர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அஸ்கிரி மகா விகாரைக்கு விஜயம் செய்து அஸ்கிரி தரப்பு மகாநாயக்க தேரர் வரகாகொட ஸ்ரீஞானரதன தேரரை சந்தித்த ஆசி பெற்றார்.

இதன்போது அஸ்கிரி தரப்பு அனுநாயக்க தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினர், புதிய ஜனாதிபதிக்கு செத்பிரித் பாராயணம் செய்து ஆசீர்வதித்தனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி. லால் காந்தவும் இந்தச் சந்திப்பில் இணைந்து கொண்டார்.










# கட்டுப்பணத்தை இழந்த வேட்பாளர்கள் 35 பேர்!

இந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மூன்று வேட்பாளர்களைத் தவிர, ஏனைய 35 வேட்பாளர்களும் தங்களது கட்டுப்பணத்தை இழந்துள்ளனர் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாகத் தெரிவான அநுரகுமார திஸாநாயக்க, இரண்டாம் இடத்தை பெற்ற சஜித் பிரேமதாஸ மற்றும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு மாத்திரமே கட்டுப்பணத்தை மீண்டும் பெறுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்றில் அதிகளவான வேட்பாளர்கள் 2024 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதித் தேர்தலில் கட்டுப்பணத்தை செலுத்தியிருந்தனர்.

இதற்கமைய 40 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்திய நிலையில், அவர்களில் 39 வேட்பாளர்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

ஜனாதிபதி வேட்பாளரான அஹிதுரூஸ் மொஹமட் இல்யாஸின் திடீர் மரணம் காரணமாக இந்தமுறை ஜனாதிபதித் தேர்தலில் 38 பேர் மாத்திரமே போட்டியிட்டனர்.

இதன்படி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஊடாக போட்டியிட்ட வேட்பாளர் ஒருவருக்கு 50,000 ரூபாவும், சுயேச்சை வேட்பாளர் ஒருவருக்கு 75,000 ரூபாவும் கட்டுப்பணமாக அறவிடப்பட்டிருந்தது.

இந்தநிலையில் தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகனான நாமல் ராஜபக்ஷ, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, விஜயதாஸ ராஜபக்ஷ, திலித் சுசந்த ஜயவீர, சரத் மனமேந்திர, பிரியந்த புஸ்பகுமார விக்ரமசிங்க, கே.கே.பியதாஸ, சிறிபால அமரசிங்க, சரத் கீர்த்திரத்ன, லலித் டி சில்வா ஆகியோர் கட்டுப்பணத்தை இழந்துள்ளனர்.

அத்துடன், தமிழ் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன், மயில்வாகனம் திலகராஜ், அபுபக்கர் மொஹமட் இன்பாஸ், ஏ.எஸ்.பி.லியனகே, பானி விஜேசிறிவர்தன, அஜந்த டி சொய்சா, பத்தரமுல்லே சீலரத்ன தேரர், நுவன் சஞ்சீவ போபகே, கே.ஆனந்த குலரத்ன ஆகியோரும் ஜனாதிபதி தேர்தலுக்கான கட்டுப்பணத்தை இழந்துள்ளனர்.

அதேநேரம், ஓஷல லக்மால் அனில் ஹேரத், ஜனக்க பிரியந்த குமார ரத்நாயக்க, அக்மீமன தயாரத்ன தேரர், கே.ஆர். கிஷான், பொல்கம்பொல ராலலாகே சமிந்த அநுருத்த, அநுர சிட்னி ஜயரத்ன, சிறிதுங்க ஜயசூரிய ஆகியோரும் கட்டுப்பணத்தை இழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மஹிந்த தேவகே, மொஹமட் இல்லியாஸ், லக்ஸ்மன் நாமல் ராஜபக்ஷ, அன்டனி விக்டர் பெரேரா, கீர்த்தி விக்ரமரத்ன, மரக்கலமானகே பிரேமசிறி, பி.டபிள்யூ.எஸ். கே.பண்டாரநாயக்க, டி.எம்.பண்டாரநாயக்க, அகம்பொடி பிரசங்க சுரஞ்ஜீவ அனோஜ் டி சில்வா, அநுருத்த ரணசிங்க ஆராய்ச்சிகே ரொஷான் ஆகியோரும் 2024ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதித் தேர்தலில் கட்டுப்பணத்தை இழந்துள்ளனர் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# மாற்றத்தை விரும்பிய பொதுமக்களின் விருப்பங்களை நிறைவேற்ற வேண்டும்

## டக்ளஸ் தேவானந்தா அறிக்கை



ஜனாதிபதித் தேர்தலில் மாற்றம் ஒன்று நிகழ வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்த மக்களின் மனவிருப்பங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையொன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்ப் பேசும் மக்களின் அபிலாசைகளையும் நாட்டின் பொருளாதார நிலைமைகளையும் மனதில் நிறுத்திக் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தீர்க்கமான முடிவொன்றை மேற்கொண்டு செயலாற்றியதாகவும், தமது நம்பிக்கைகளுக்கு மாறாக நாட்டிலுள்ள மக்களில் அதிகமானோர் ஆட்சி மாற்றமொன்றையே விருப்பமாக வெளிப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சமத்துவமான தேசத்தை உருவாக்கும் கனவோடு ஆட்சி அமைத்திருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அனைத்து மக்களினதும் கனவுகளையும் ஈடேற்றுவார் என எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்றும் வகையில் வாக்களிப்பில் கலந்து கொண்ட அனைவருக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நன்றி தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் -24.09.2024




இன்று சோர்வு மனப்பான்மையும் தேவையற்ற கவலைகளும் காணப்படும். எதையும் இலேசாக எடுத்துக் கொள்வது நல்லது.

பணியில்தவறுகள்செய்யநேரலாம். உங்கள் தவறுகளை கண்டுணர்ந்து அதனை சரிசெய்து கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.உங்கள் துணையை புரிந்து கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வது நல்லது.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்காது.தேவையில்லாத செலவினங்களை சந்திக்க நேரும்.இது உங்களுக்கு கவலையை உருவாக்கும்.

உங்கள் தோள்களில் வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.




இன்று பொறுமையுடன் இருக்க வேண்டும். விஷயங்களை யதார்த்தமாக கையாள வேண்டும். உடன் பிறந்தவர்களால் சில பிரச்சினைகள் நேரலாம்.

பணியிடச் சூழல் அவ்வளவு சிறப்பாக இருக்காது. ஏற்ற இறக்கங்கள் காணப்படும்.

உங்கள் துணையுடன் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். சில சமயங்களில் நீங்கள் கட்டுப்பாட்டை இழப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

உங்கள் நிதிநிலைமை மோசமாக இருக்கும்.அதிகரிக்கும் செலவினங்கள் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

மனஅழுத்தம் காரணமாக கழுத்தில் விறைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று சவலான நாள். நல்ல இசையைக் கேட்பது, ஆன்மீக விஷயங்களில் ஈடுபடுவது போன்றவை நற்பலன்களை அளிக்கும்.

பணியிடச் சூழல் அதிருப்தியை அளிக்கும்.அது உங்களுக்கு வருத்தத்தை உண்டாக்கும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் தீவிரம் காட்டுவீர்கள்.நட்பான அணுகுமுறை மூலம் நல்ல புரிந்துணர்வை உருவாக்கலாம்.

இன்று போதிய அளவு பணம் இருக்காது.அதனால் பிறரிடம் கடன் வாங்க நேரும்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. காய்ச்சலினால் தொந்தரவு ஏற்படலாம்.




இன்று உங்கள் இலட்சியங்கள்நிறைவேறும் பரிபூரணமான நாள். மகிழ்ச்சிகரமான தருணங்கள் சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் அள்ளித் தரும். இன்று முக்கியமான முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

ஒப்புக்கொண்ட பணிகளை முடித்துத்தரவேண்டும் என்ற மனஅழுத்தம் காணப்படும். சகபணியாளர்களுடனான நல்லுறவு பயனளிக்கும்

உங்கள் அன்பான அணுகுமுறை உங்கள் துணை உங்களை நன்கு புரிந்து கொள்ள உதவும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். சேமிக்க வேண்டும் என்ற உந்துதல்அதிகரிக்கும்.

சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். சிறந்த ஆற்றலுடன் துடிப்புடன் நீங்கள் காணப்படுவீர்கள்.




இன்று அதிர்ஷ்டமான நாள்.முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம்.இன்று மனம் தெளிவுடன் காணப்படும்.அதனால்பலநற்பலன்கள் காணலாம்.

நீங்கள் பணியை அனுபவித்து செய்வீர்கள்.உங்கள் திறமைக்கான அங்கீகாரம் பெறுவீர்கள்.

வெளிப்படையான உணர்வுகளின் மூலம் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இன்று அதிக பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு உள்ளது.இன்று வணிகத்தில் ஈடுபடுவதன் மூலம் லாபம் பெறலாம்.

இன்று நீங்கள் சுறுசுறுப்புடனும் திடமாகவும் காணப்படுவீர்கள். ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது.




இன்று யதார்த்தமான அணுகுமுறை தேவை.வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் உங்கள் ஆற்றல் அதிகரிக்கும்.

உங்கள் பணி செயல்திறன் நன்றாக இருக்கும்.உங்கள் முயற்சிக்கான பாராட்டைப்பெறுவீர்கள்.

நல்ல புரிந்துணர்வை வளர்ப்பதற்கு உணர்ச்சிவசப்படுதலை தவிர்க்க வேண்டும். துணையிடத்தில் சகஜமான அணுகுமுறை வேண்டும்.

செலவினங்கள்அதிகரித்து காணப்படும்.தேவையில்லாத செலவினங்களை தவிர்க்க வேண்டும். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.இன்று தொண்டையில் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று குறைந்த வளர்ச்சியே காணப்படும்.சவால்கள் நிறைந்திருக்கும். உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவது இன்று கடினமாக இருக்கும்.

சகபணியாளர்களுடன் சுமுகமான உறவுமுறை காணப்படாது என்றாலும் பொறுமையுடன் கையாண்டால் நல்ல பலன் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் கவனமற்ற மற்றும் அக்கறையற்ற பேச்சின் மூலமாக தவறான புரிந்துணர்வு ஏற்படும்.அதனால் கவனமாக செயல்பட்டு நல்ல புரிந்துணர்வை உருவாக்க வேண்டும்.

பயணத்தின் பொழுது பணஇழப்பு நேரலாம். கவனமாக கையாள வேண்டும்.

தலைவலிக்கான வாய்ப்பு உள்ளது.தியானம் மேற்கொள்வதன் மூலம் அமைதி பெறலாம்.




இன்று நம்பிக்கையோடு காணப்படுவீர்கள்.நற்பலன்கள் கிடைப்பதற்கான நல்ல வாய்ப்புகள் உள்ளன. இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

உங்கள் பணி செயல்திறனில் நல்ல முன்னேற்றம் காணப்படும்.உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

வெளியிடங்களுக்குச் செல்வதன் மூலம் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்ளலாம். இது இருவருக்கும் புத்துணர்ச்சி தரக்கூடியதாக இருக்கும்.

உங்கள் வீட்டுப்பெரியவர்களிடமிருந்த பணம் பரிசாக கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

நல்ல ஆரோக்கியம் காணப்படுகின்றது.ஆரோக்கியக் குறைபாடு ஏதும் இருக்காது.

# இன்றைய ராசி பலன்கள் -24.09.2024




உங்கள் முயற்சிகள் வெற்றிய டைவதற்கு சாதகமான நாள்.இன்று நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். கடினமான பணிகளையும் எளிதில் முடிப்பீர்கள்.

உங்கள் பணி செயல்திறன் பாராட்டத்தக்க வகையில் இருக்கும். உங்களின் பணிக்கான பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் ஆழ்ந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வதன் மூலம் நல்ல புரிந்துணர்வை அனுபவித்து மகிழலாம்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும்.உங்கள் சேமிப்பு நிலை அதிகரிக்கும்.முக்கியமான முதலீடுகளுக்கு இன்று உகந்த நாள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.சாதகமான சூழ்நிலை உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.




உங்கள் அனுபவம்உங்களுக்கு நல்ல பாடத்தை கற்றுத் தரும்.ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியையும் ஆறுதலையும் அளிக்கும்.

இன்று பரபரப்பான வேலைகள் காணப்படும்.திட்டமிட்டு பணியாற்றுவதன் மூலம் நல்ல பலன்களைக் காணலாம்.

உங்கள் துணை உங்களிடம் முரண்பட்டு இருப்பதாக உணர்வீர்கள். நட்பான அணுகுமுறை கொண்டு அவரை புரிந்து கொள்ள முயற்சி செய்வது நல்லது.

வீட்டுச் சீரமைப்பிற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.இன்று செலவுகள் அதிகமாக காணப்படும்.

சளி மற்றும்இருமல் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும்.குளிர்ந்த பானங்கள் அருந்துவதை தவிர்க்கவும்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பதற்கு உங்களிடம் தைரியமும் உறுதியும் இருக்க வேண்டியது அவசியம். எதையும் இலேசாக எடுத்துக்கொள்ளும் போக்கு உங்களுக்கு நற்பலன்களைத்தரும்.

அதிகமான பணிச்சுமை காரணமாக பணியில் மும்மரமாக இருப்பீர்கள்.இதனால் பணியில் தவறுகள் செய்ய நேரலாம்.கொடுக்கப்பட்ட பணிகளை கவனமாக கையாள வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் அமைதியான அணுகுமுறையைக் கையாண்டு நல்ல புரிந்துணர்வை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.இதனால் மகிழ்ச்சி ஏற்படும்.

பயணத்தின்பொழுது பணஇழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். சத்தான ஆகாரங்களை உட்கொள்ளுங்கள்.




இன்று அனைத்து வகையிலும் முன்னேற்றம் காணப்படும்.உங்கள் முயற்சி மற்றும் உற்சாகம் மூலம் தொடர்ந்து வெற்றி கிடைக்கும்.

பணி சார்ந்த புதிய வாய்ப்புகள் ஆழ்ந்த திருப்தியை உருவாக்கும். பணியை அனுபவித்து செய்து மகிழ்வீர்கள்.

உங்கள் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வதன் மூலம் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை தக்க வைத்துக் கொள்வீர்கள்.

அதிக பணவரவு காணப்படும்.இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம்.

தேக ஆரோக்கியம் சிறப்பாக உள்ளது.மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman



CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park